# இலங்கையின் விவசாயக்கைத்தொழில் அபிவிருத்தியும் விவசாய சட்டங்களும்



The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி மட்டம் 1.3

# இலங்கையின் விவசாயக்கைத்தொழில் அபிவிருத்தியில் விவசாயக் கொள்கையினதும் , விவசாய சட்டங்களினதும் பங்களிப்பு.

## விவசாய அபிவிருத்தி

விவசாயத்துறை சார்ந்த பயிர்செய்கை விலங்கு வளர்ப்பு, மீன்பிடி மற்றும் வனவளர்ப்பு ஆகிய துறைகளில் ஏற்படும் பேண்தகுநிலை விருத்தி விவசாய அபிவிருத்தி எனக் கருதப்படும்.

## இலங்கையின் விவசாய அபிவிருத்திப் போக்கு

வேடர் யுகம்

↓

மன்னர் ஆட்சிக்காலம்

↓

அந்நியர் ஆட்சிக்காலம்

- வர்த்தகப் பொருளாதாரம்
- பெருந்தோட்டப் பயிர்கள் அறிமுகம்
- தோட்டச் செய்கைக்காக தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டமை
- உட்கட்டமைப்பு வசதிகள்

↓

சுதந்திர இலங்கை




1978

**திறந்த பொருளாதாரக்கொள்கை**

- விலை நிருணயம், கட்டுப்பாட்டு விலை
- வெளிநாட்டு சந்தை வாய்ப்பு

**விவசாயக்குடியேற்றங்கள் மற்றும் பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள்**

தொகுப்பு : திரு. வ.சசிகுமார், ஆசிரியர் - விவசாய விஞ்ஞானம் (கிளி/ பளை மத்திய கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சோ.நிரோஜன் ஆசிரியர் - த. தொ. தொழினுட்பம் (வ/ஓலுமடு தமிழ் மகா வித்தியாலயம்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# தரம் - 12 , 13



## தேசிய விவசாயக் கொள்கை

திட்டமிட்ட சமூக பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு உணவுப்பயிர்களின் உற்பத்தி ஏற்றுமதி விவசாயப்பயிர் மற்றும் அலங்காரத் தாவரங்கள் உற்பத்தி மற்றும் விவசாயத்துறை தொடர்பான சவால்களை எதிர்கொள்வதற்கும் உதவும் வகையில் விவசாயக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

**தேசிய விவசாயக் கொள்கை 2007 | செப்ரெம்பர் | 03 ஆம் திகதியிலிருந்து நடைமுறையிலுள்ளது**

## விவசாயக் கொள்கையின் நோக்கங்கள்

- உணவுக்காப்பினை உறுதி செய்தல்
- விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல்
- உற்பத்திச் செலவினைக் குறைத்தல்
- விவசாயத் துறை வளர்ச்சியில் பேண்தகு தன்மையினை உறுதிப்படுத்தல்
- விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல்
- விவசாயத்துறை சார்ந்த வேலை வாய்ப்பினை அதிகரித்தல்
- பயன்படுதன்மை கொண்ட பயிர்செய்கை முறைகளையும் மேம்படுத்திய தொழினுட்பங்களையும் பயன்படுத்தல்
- உள்ளூர் உணவுப் பயன்பாட்டினை அதிகரித்தல்

## விவசாயக்கொள்கைகள் சில

- ♦ காணி மற்றும் நிலப்பயன்பாடு பற்றிய கொள்கை
- ♦ நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமை பற்றிய கொள்கை
- ♦ பேண்தகுநிலை விவசாயம் பற்றிய கொள்கை
- ♦ வித்து மற்றும் நடுகைப் பொருட்கள் பற்றிய கொள்கை
- ♦ மண்டப்படுத்தல் கொள்கை
- ♦ அறுவடைக்குப் பிந்திய தொழினுட்பம் பற்றிய கொள்கை
- ♦ சந்தைப்படுத்தல் பற்றிய கொள்கை

தொகுப்பு : திரு. வ.சசிகுமார், ஆசிரியர் - விவசாய விஞ்ஞானம் (கிளி/ பளை மத்திய கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சோ.நிரோஜன் ஆசிரியர் - த. தொ. தொழினுட்பம் (வ/ஓலுமடு தமிழ் மகா வித்தியாலயம்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## விவசாயக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்ட சட்டங்கள் சில

- 1889 இன் 23ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச்சட்டம்
- 1958 இன் 1ஆம் இலக்க நெற்க்காணிச் சட்டம்

  நோக்கம் : குத்தகை விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

- 1973 இன் 42ஆம் இலக்க விவசாய காணி மற்றும் குடியேற்றச் சட்டம்

  நோக்கம் : குத்தகை கமக்கார் இறந்த பின்னர் குத்தகை உரிமையை வழங்கும் முறை, குத்தகை கமக்காரினால் நிலச் சொந்தக்காருக்கு வழங்க வேண்டிய பங்கு பற்றி தீர்மானித்தல்

- 2000 இன் 46ஆம் இலக்க கமநல விருத்திச் சட்டம்

  நோக்கம் : வயற்காணியினை அனுமதியின்றி வேறு தேவைகளுக்கு பயன்படுத்துவதை தடுத்தல்.

- 1999 இன் 35ஆம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டம்

  நோக்கம் : இலங்கைக்குள் புதிதாக வந்து சேரும் பல்வேறு நோய்கள் பீடைகள் ஆகியவற்றினால் எமது நாட்டு தாவரக் குடித்தொகைக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தடுத்தல்.

- 1961 இன் 13ஆம் இலக்க விவசாய காப்புறுதிச் சட்டம்

  நோக்கம் : 1. பயிர்செய்கையின் நிச்சயமற்ற தன்மையினைக் குறைத்தல்

  2. பயிர்களுக்கு ஏற்படும் இழப்பிற்கு நட்ட ஈடு வழங்குதல்.

## விவசாய அபிவிருத்திச் செயன்முறையில் பல்நோக்கு விவசாய அபிவிருத்தித் திட்டங்கள்

**திட்டங்கள் சில :**

- கல்லோலாயத் திட்டம்
- உட வளவைத்திட்டம்
- மகாவலித்திட்டம்

தொகுப்பு : திரு. வ.சசிகுமார், ஆசிரியர் - விவசாய விஞ்ஞானம் (கிளி/ பளை மத்திய கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சோ.நிரோஜன் ஆசிரியர் - த. தொ. தொழினுட்பம் (வ/ஓலுமடு தமிழ் மகா வித்தியாலயம்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நோக்கங்கள் :

- உணவில் தன்னிறைவும் உணவுக்காப்பினையும் ஏற்படுத்தல்
- காணி அற்றவர்களுக்கு காணி வழங்குதல்
- வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்
- நீர்மின் உற்பத்தி செய்தல்
- குடியிருப்புக்களை பரவலாக்கம் செய்தல்
- வனச் செய்கையை விரிவாக்குதலும் சூழற்காப்புச் செயன்முறையும்

## 1. கல்லோயாத்திட்டம்

**குறிக்கோள் :** 1931 இன் பின்னர் உலர்வலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் குடியேற்றத்தை மேலும் விரிவான ஒழுங்குடன் ஒழுங்குபடுத்தல்

**சமூக பொருளாதார அபிவிருத்திக்கான பங்களிப்பு :**

- o பல சிறு குளங்கள் அமைக்கப்பட்டமை
- o மின்னுற்பத்தி மேற்கொள்ளல்
- o ஓடு, செங்கல் உற்பத்தி கைத்தொழில்

**சமூக சுற்றாடல் பிரச்சினைகள் :** சமூக ஏற்றத்தாழ்வுகள்

தொகுப்பு : திரு. வ.சசிகுமார், ஆசிரியர் - விவசாய விஞ்ஞானம் (கிளி/ பளை மத்திய கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.சோ.நிரோஜன் ஆசிரியர் - த. தொ. தொழினுட்பம் (வ/ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயம்.
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 2. உடவளவைத்திட்டம்

**குறிக்கோள் :** வருடம் முழுவதும் வரட்சியினால் பிரச்சினைக்குள்ளகும் தென்கிழக்குப் பிரதேசங்களை விருத்தி செய்தல்

**சமூக பொருளாதார அபிவிருத்திக்கான பங்களிப்பு :**

- மின் உற்பத்தி
- பயிர் செய் நிலப்பரப்பு அதிகரிக்கப்பட்டமை

**சமூக சுற்றாடல் பிரச்சினைகள் :** கோடை காலங்களில் நீர்ப்பற்றாக்குறை

## 3. மகாவலித்திட்டம்

**நோக்கம் :**

- உணவில் தன்னிறைவு பெறுதல்
- வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்தல்
- நீர்மின் உற்பத்தி, நவீன தொழினுட்பங்களைப் பயன்படுத்தல்

**சமூக பொருளாதார அபிவிருத்திக்கான பங்களிப்பு :**

- உணவுக்காப்பினை ஏற்படுத்தல்

**சமூக சுற்றாடல் பிரச்சினைகள் :** சமூக ஏற்றத்தாழ்வு



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மதிப்பீட்டு வினாக்கள்

1. விவசாயத் திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.

2. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள் இரண்டினைக்குறிப்பிடுக,

3. விவசாய அபிவிருத்தியில் விவசாய சட்டங்களின் முக்கியத்துவத்தினை விளக்குக.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk